திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, இந்த விபத்துக்களிலே இறந்தவர்களுக்கு ஏதாவது நஷ்டயீடு கொடுக்கப்பட்டிருக்கிறதா ? இல்லையென்ருல், இனிமேல் அந்த மாதிரி விபத்துக்களில் இறப்பவர்களுக்கு நஷ்டயீடு கொடுப்பதற்கு வேண்டிய ஒரு முறையான ஏற்பாடு செய்யப்படுமா? என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அவ்வப்போது நஷ்டயீடு அந்த விபத்துக்களுக்கேற்ருற்போல் accident compensation வழங்கப்பட்டு வருகிறது.

Common Good Fund of Religious Endowments Department

*597 *Q.*—Thiru N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether it is a fact that there are regulations govering the expenditure incurred from out of the Common Good Fund of the Commissioner of Hindu Religious and Charitable Endowments Department ; and

(*b*) if so, whether a copy of the same will be placed on the table of the House ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) அவையின் மேசைமீது இதுபற்றி நகல்கள் @ வைக்கப்படுகின்றது.

திரு. என். கே. பழனிசாமி : சார், கோயில்களில் பழுது ஏற்பட்டால், அவைகளை ரிப்பேர் செய்வதற்கு ஒரு குறிப்பிட்ட தொகையையோ, பூரா தொகையையோ, சர்க்காருடைய அனுமதி பெற்று கொடுப்பதாக இந்த அறிக்கையிலேயிருக்கிறது. அனுமதிக்க எந்தெந்த விதிகளை பூர்த்தி செய்ய வேண்டும் ? அல்லது பிரையாரிட்டி பேசிசிலே கொடுக்கப்படுகிறதா ? எந்த அடிப்படையிலே இந்தமாதிரி உதவி கொடுக்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, அந்தந்த கோயில்களுடைய வருமானத்தைப் பொறுத்தவரையில் பிரிவு 12 இரண்டாவது துணைப் பிரிவின் கீழ் நிர்வாக நிதியாக, அட்மினிஸ்ட்ரேடிவ் ஃபண்ட் என்பதாகச் செலுத்த வேண்டும். அதற்கடுத்த பிரிவு 192-ல் இரண்டாவது பிரிவு தணிக்கை நிதி. அந்த இரண்டு, நிர்வாக நிதி, தணிக்கை நிதி இரண்டும் செலுத்தியது போக, மீதியிருக்கிற பணத்தை எந்தெந்த வகையிலே செலவிட வேண்டுமென்பதற்கு விதிகளை நாம் வைத்திருக்கிறோம். அந்தந்தக் கோயில்களிலே நிர்வாகச் செலவு போக

@ 121—125ம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.

1975 எப்ரல் 8]

மீதியிருக்கின்ற பணத்தை மற்றக் கோயில்களுக்கு நிதி மாற்றம் செய்வதாக இருந்தாலும் அல்லது சமுதாயத் துறையிலே தேவையான காரியங்களைச் செய்வதாக இருந்தாலும் ஏற்கெனவே அவையிலே வைக்கப்பட்டிருக்கிற குறிப்பினுடைய விதிகளின் அடிப்படையில் அந்த நிதியை மாற்றப்-செய்து செயல்பட்டு வருகிறோம்.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் குடும்பப் பாதுகாப்பு நிதி கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். அந்த நிதி இந்த நிதியிலிருந்து கொடுக்கப்படுமா ? அல்லது அதற்கென்று தனியாக நிதி திரட்டப்படுமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, குடும்பப் பாதுகாப்பு நிதியைப் பொறுத்தவரையில் கோயில் ஊழியர்களுக்கு எந்த வகையில் செயல்படுத்தலாம் என்பதைப் பற்றி தற்பொழுது அரசாங்கம் ஆலோசனை செய்து கொண்டிருக்கிறது. ஆனால், ஏற்கனவே அரசாங்க ஊழியர்களுக்கு இருப்பதைப் போல் கோயில் ஊழியர்களுக்கும் அந்தத் திட்டத்தைப் பயன்படுத்த வேண்டுமென்ற முடிவு வரவு-செலவுத் திட்டத்திலே அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், எந்தெந்த வகையில் நிதி சேர்ப்பது, எந்தெந்த வகையிலே ஊழியர்கள் குடும்பத்திற்குப் பாதுகாப்பு வழங்குவது என்பதைப் பற்றி அரசாங்கம் பரிசீலித்து, வருகின்ற ஜூன் மாதம் 3-ம் தேதியிலிருந்து அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தவிருக்கிறது.

அறநிலையத்துறையின் கீழுள்ள ஆலயங்கள்

*598 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

தமிழ் நாட்டிலுள்ள இந்து அறநிலைய ஆட்சித்துறையினரின் பொறுப்பிலுள்ள எந்தெந்த ஆலயங்களின் ஆண்டு வருமானம் இருபத்தைந்து லட்சமும் அதைத் தாண்டியும் உள்ளன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :

(1) அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி கோயில், பழனி.

(2) அருள்மிகு சுப்பிரமணியசுவாமி கோயில், திருச்செந்தூர்.

(3) அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயில், மதுரை.

(4) அருள்மிகு சுப்பிரமணியசுவாமி கோயில், திருத்தணி.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, அறநிலையத்துறைக்குக் கட்டுப்படாமல், அதே நேரத்தில் பல இலட்சக்கணக்கான ரூபாய்க்கு வருமானமுடைய கோயில்களாக தர்மபுரம் ஆதினத்திற்குக் கட்டுப்பட்ட 27 கோயில்கள் தஞ்சை மாவட்டத்திலே இருக்கின்றன. எனவே, அத்தகைய கோயில்களை அறநிலையத்துறையின் கீழ் கொண்டுவர அரசு ஆவன செய்யுமா அத்தகைய கோயில்களை அறநிலையத்துறையின் கீழ் கொண்டுவர முடியாததற்கான சங்கடங்கள் என்னவென்பதை அறிவிக்க இயலுமா?